
தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 230 | 4 Pages | 18.3.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 230 | 4 பக்கங்கள் | 18.3.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**

**விளக்கம்:**
இறப்பு எனப்படுவது ஒருவனுக்குஉறக்கம் வருதலைப் போன்றது, பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

# ரோந்து பணியின்போது மயங்கி விழுந்து உயிரிழந்த தலைமை காவலரின் குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிதியுதவி

சென்னை, மார்ச்.18

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:


விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வந்த சீனுவாசன் (வயது 40) இன்று (16.3.2025) காலை சக காவலர் மஞ்சுநாதன் என்பவருடன் தொரவி கிராமத்தில், விக்கிரவாண்டி புதுச்சேரி மாநில நெடுஞ்சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகப்படும்படியாக இருச்சக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்களில் இரண்டு நபர்களை சக காவலருடன் மடக்கிப்பிடித்து விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

பின்னர் தப்பியோடிய மூன்றாவது நபரை பிடிப்பதற்காக கயத்தூர் கிராமத்தில் தேடிவந்து கயத்தூர் சுடுகாடு அருகே அந்த மூன்றாவது நபரை விரட்டிப் பிடிப்பதற்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக மயங்கி கீழே விழுந்த தலைமைக் காவலர் சீனுவாசனை சககாவலர் உடனடியாக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் தலைமைக் காவலர் சீனுவாசன் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.



தலைமைக் காவலர் சீனுவாசனின் அர்பணிப்புடன் கூடிய பணி எந்நாளும் நினைவு கூறத்தக்கது. அவரது உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சீனுவாசனை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ரிசர்வ் வங்கிக்கு டிஜிட்டல் பரிமாற்ற விருது: பிரதமர் மோடி பாராட்டு



புதுடெல்லி, மார்ச்.18

லண்டன் மத்திய வங்கியின் டிஜிட்டல் பரிமாற்ற விருதுக்கு இந்திய ரிசர்வ் வங்கி தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இதை ரிசர்வ் வங்கி தனது எக்ஸ்தளத்தில்வெளியிட்டு உள்ளது.

அதன்படி, 'இந்திய ரிசர்வ் வங்கிக்கு முவால் உருவாக்கப்பட்ட பிரவாஹ் மற்றும் சார்த்தி அமைப்புகள் உள்ளிட்ட அதன் முன்முயற்சிகளுக்காக விருதும், அங்கீகாரமும் வழங்கப்பட்டு உள்ளது. இந்த டிஜிட்டல் முயற்சிகள்காகித பயன்பாட்டைக்குறைத்து, ரிசர்வ் வங்கியின் உள் மற்றும் வெளிப்புற செயல்முறைகளை மாற்றியிருப்பதை விருது குழு பாராட்டி உள்ளது' என குறிப்பிடப்பட்டு இருந்தது. ரிசர்வ் வங்கிக்கு விருது வழங்கப்படுவதை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், 'நிர்வாகத்தில் புதுமை மற்றும் செயல்திறன் மீதான முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் ஒரு பாராட்டத்தக்க சாதனை. டிஜிட்டல் கண்டுபிடிப்புகள் இந்தியாவின் நிதிசூழல்அமைப்பைதொடர்ந்துவலுப்படுத்தி, எண்ணற்றஉயிர்களை மேம்படுத்துகின்றன' என கூறியிருந்தார்.

## கடந்த 5 ஆண்டுகளில் ரூ.400 கோடி வரி செலுத்திய அயோத்தி ராமர் கோவில் அறக்கட்டளை



லக்னோ, மார்ச்.18

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோவிலுக்கு நாடு முழுவதும் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இந்நிலையில், மத சுற்றுலாவில் ஏற்பட்டுள்ள எழுச்சிக்கு மத்தியில், அயோத்தி ராமர் கோவில் அறக்கட்டளை கடந்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ.400 கோடி வரி செலுத்தியுள்ளது என்று அறக்கட்டளை செயலாளர் சம்பத் ராய் தெரிவித்துள்ளார்.

இந்த தொகை பிப்ரவரி 5, 2020 முதல் பிப்ரவரி 5, 2025 வரை செலுத்தப்பட்டதாகஅவர்கூறினார். இதில் ரூ.270 கோடி சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜி.எஸ்.டி.) செலுத்தப்பட்டதாகவும், மீதமுள்ள ரூ.130 கோடி பல்வேறு வரி வகைகளின் கீழ் செலுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அயோத்தியில் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை சுமார் 10 மடங்கு அதிகரித்துள்ள நிலையில், தற்போது அயோத்தி ஒரு முக்கிய மத சுற்றுலா மையமாக மாற்றியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர், உள்ளூர்வாசிகளுக்கு வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மகா கும்பமேளாவின் போது 1.26 கோடி பக்தர்கள் அயோத்திக்கு வருகை தந்தனர். கடந்த ஆண்டில், அயோத்திக்கு 16 கோடி வருகை தந்தனர். அதில் 5 கோடி பேர் ராமர் கோவிலுக்கு வருகை தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சப்இன்ஸ்பெக்டர் உள்பட 2 பேரை அடித்துக்கொன்ற கும்பல்; அதிர்ச்சி சம்பவம்

போபால், மார்ச் 18

மத்தியபிரதேச மாநிலம் மவ்கஞ்ச் மாவட்டம் குட்ரா கிராமத்தை சேர்ந்தவர் அசோக் குமார். பழங்குடியின சமூகத்தை சேர்ந்த அசோக் சில மாதங்களுக்குமுன் சாலை விபத்தில் உயிரிழந்தார். ஆனால், அசோக் குமார் கொலை செய்யப்பட்டதாகவும், அந்த கொலையில் அதேபகுதியை சேர்ந்த சன்னி விவாடி என்ற நபருக்கு தொடர்பு இருப்பதாகவும் பழங்குடியினர் கருதியுள்ளனர்.

இதனிடையே, விவாடியை பழங்குடியினத்தை சேர்ந்த கும்பல் இன்று கடத்தியது. குட்ரா கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் விவாடியை அடைத்துவைத்து அவரை கடுமையாக தாக்கினர்.

இந்த கடத்தல் குறித்து தகவல் அறிந்த ஷாபூர் பகுதி இன்ஸ்பெக்டர் ராமச்சந்திர கவுதம், சப் இன்ஸ்பெக்டர் பாரதியா தலைமையிலான போலீசார் குட்ரா கிராமத்திற்கு விரைந்து சென்றனர்.

ஆனால், போலீசார் வருவதற்குள் விவாடியை அந்த கும்பல் அடித்துக்கொலை செய்தது. அவரது உடல் அங்குள்ள வீட்டில் இருந்த நிலையில் வீட்டின் கதவை திறக்க போலீசார் முயன்றனர். அப்போது, போலீசாரையும் அந்த கும்பல் கடுமையாக தாக்கியது.

கற்கள், கட்டைகளை கொண்டு சப்இன்ஸ்பெக்டர் சந்தீப் உள்பட போலீசார் மீது அந்த கும்பல் தாக்குதல் நடத்தியது. இந்த கொடூர தாக்குதலில் படுகாயமடைந்த சந்தீப் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சந்தீப் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும், சில போலீசாருக்கும் படுகாயம் ஏற்பட்டது.

கும்பல் தாக்கியதில் சப்இன்ஸ்பெக்டர் சந்தீப், குட்ரா கிராமத்தை சேர்ந்த சன்னி விவாடி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், சிலர் தலைமறைவான நிலையில் தேடுதல் வேட்டை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சப்இன்ஸ்பெக்டர் உள்பட 2 பேர் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கோவை மாநகராட்சி 73 வார்டில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம், கண் சிகச்சை, ரத்த தான முகாம்



தமிழக முதல்வர் திராவிட தலைவர் அப்பா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகராட்சி 73 வார்டு இல் தலைமை செயற்குழு உறுப்பினரும் கோவை மாநகராட்சி நகரமைப்பு குழு தலைவர் சோமு(எ) த.சந்தோஷ் ஏற்பாட்டில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம், கண் சிகச்சை முகாம், இரத்தம் தான முகாம் மற்றும் உடல் உறுப்பு தான முகாம் ஆகியவை நடைபெற்றது. இவ்விழாவில்வட்டதுணைசெயலாளர் ராஜேஸ்வரி, கழக உறுப்பினர் BLA 2 பசுவை நாகராஜ் உட்பட 5 பேர் உடல் உறுப்பு தானம் செய்தனர். கண் சிகிச்சை முகாமில் 85 பேரும், மருத்துவ முகாமில் 71 பேரும் பயன் பெற்றனர். மேலும் 12 பேர் இரத்த தானம் வழங்கினர். இவ்விழாவில் வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர். அ. ரவி, அர். எஸ். புரம் பகுதி செயலாளர் கார்த்திக் செல்வராஜ், துணை மேயர் பொதுகுழு உறுப்பினர் வெற்றிசெல்வன், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி, காந்திபார்க் முருகன் கோவில் அறங்காவலர்தலைவர் பரமசிவம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தியாகு, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் உசைன்பாய், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் விஜயலட்சுமி, வட்டசெயலாளர்கள், பழக்கடைஆறுமுகம், ஜெகதீசன், மகேஷ்வரன், வட்டநிர்வாகிகள், தை. ரவிச்சந்திரன், குட்லி(எ)ராஜேஷ்குமார், ராஜேஸ்வரி, குமரேசன், வீனஸ் நட்ராஜ், மருதாசலமூர்த்தி, இளங்கோ, தமிழ்மணி, காலணி சந்துரு, மகேந்திரன், விமல்ராஜ், முருகேசன், பசுவைநாகராஜ், வெங்கடேசன் விஜயலக்ஷ்மி, சுசிலா, ஜானகிஈஸ்வரி, சீனி, மணிகண்டன், செல்வபுரம் சிவராமன், செல்வபுரம் புருசோத்தமன், செல்வபுரம் சந்திரசேகர், அழகுவேல், ஜெயபிரகாஷ், சிவகுமார், ஆறுமுகநயினார், நம்கழகதுடன் இணைந்து இந்தியா மருத்துவ சங்க கோவை கிளை மற்றும் சீதாராம் மருத்துவமனை உரிமையாளர் மருத்துவர் வெங்கட்ராமன், மருத்துவர் சீதாராம் (எ) ஹரிஷ் ஆகியோர் ஒத்தழைப்பு வழங்கினர்.

## ஜல்லிக்கட்டு போட்டியில் உயிரிழந்த வீரரின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் சாலை மறியல்



மதுரை அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை ஜல்லிக்கட்டு அரங்கில் மேலூர் சட்டமன்ற தொகுதி சார்பாக அநேற்று முன்தினம் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில் சோழவந்தான் அருகே மேலக்கால் ஊராட்சி கச்சிராயிருப்பு கிராமத்தைச் சேர்ந்த மகேஷ் பாண்டி (வயது 25 ) என்பவர் பங்கேற்றார்.

இவர் மாடு பிடித்த போது இடது நெஞ்சில் மாடு குத்தியதில் படுகாயம் அடைந்து உயிரிழந்தார். இதனிடையே ஜல்லிக்கட்டில்உயிரிழந்தவீரருக்குஉரிய இழப்பீடுவழங்க வேண்டும் எனக்கூறி உடலை வாங்க மறுத்து கோரிப்பாளையம் பிரதான சாலையில் அமர்ந்து உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் கோரிப்பாளையம் அரசு மருத்துவமனை பிரதான சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

## மதுரை மாவட்டத்தில் முதல்வர் மருந்தகங்களில் மருந்துகள் வாங்கி பயனடைந்த பயனாளிகள் முதலமைச்சருக்கு நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்லும் பொதுமக்கள் தங்களுக்கான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாலும், நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதாலும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதை கருத்திற்கொண்டு "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்களை கடந்த 24.02.2025அன்று தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதல்வர் மருந்தகம் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில்முனைவோர் சார்பில் 500 மருந்தகங்களும், கூட்டுறவுத் துறை சார்பில் 500 மருந்தகங்களும் என மொத்தம் 1000 மருந்தங்கள் முதற்கட்டமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், B.Pharm/D.Pharm படித்த பட்டதாரிகள் 1000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர். முதல்வர் மருந்தகங்களில் பொதுமக்களுக்கு தேவையான தரமான மருந்துகள் சந்தை மதிப்பைக்காட்டிலும் 75% குறைந்த விலையில் கிடைக்கிறது. முதல்வர் மருந்தகங்களில் ஜெனரிக், பிராண்டட் மருந்துகளும், சித்தா, ஆயுர்வேதம், யுனானி மருந்துகள் மற்றும் சர்ஜிகல் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து மருந்துகளும் 25% வரை தள்ளுபடி விலையிலும் கிடைக்கிறது. மேலும், 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களில் இதுவரை 4,288 நபர்கள் மருந்துகள் வாங்கி பயனடைந்துள்ளனர்.

எனவே, பொதுமக்கள் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு தங்களுக்கு தேவையான மருந்துகளை மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களின் வாயிலாக குறைந்த விலையில் பெற்று பயனடையலாம்.

முதல்வர் மருந்தகங்கத்தில் மருந்துகள் வாங்கி பயனடைந்த திருமோகூர் கிராமத்தை சார்ந்த திருமதி.ராஜம்மாள் அவர்கள் தெரிவித்ததாவது:

என் பெயர் ராஜம்மாள். நான் திருமோகூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 58 வயதாகிறது. நான் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வருகிறேன். எனக்கு 1 மாதத்திற்கு மருந்துகள் வாங்குவதற்கு குறைந்தது 3 ஆயிரம் ரூபாய் செலவாகும். எங்கள் குடும்பம் வறுமையில் உள்ளதால் என்னால் மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய்க்கு மருந்துகள் வாங்குவதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தேன். தற்போது, மாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கியதில் இந்த மாதம் எனக்கு ரூபாய் 1500 வரை சேமிப்பு ஏற்பட்டுள்ளது. என்னைப் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய சூழ்நிலையில் உள்ளவர்கள் பயனடையும் வகையில் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொகுப்பு**
**இ.சாலி தளபதி எம்.ஏ.,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**
**ம.கபிலைச் செல்வம், பி.இ.,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.**




கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.




சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் சிறப்பாக பணிபுரிந்து குற்றவாளிகளுக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றுத்தர சீரிய பணியாற்றிய உதவி ஆணையாளரை நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

தினகனி



# உத்திரமேரூர் அருகே பரபரப்பு: சடலத்தை புதைக்க இடமின்றி விடியவிடிய தவித்த மக்கள்



உத்திரமேரூர், மார்ச்.18

சுடுகாட்டுக்கு பயன்படுத்தி வந்த இடத்தை தனிநபர்ஒருவர்வாங்கியதால், இறந்தவரின் சடலத்தை அடக்கம் செய்ய முடியாமல் கிராம மக்கள் விடிய விடிய தவித்தனர். இது, உத்திரமேரூர் அருகே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. உத்திரமேரூர் அருகே சித்தமல்லி கிராமத்தில் சுமார் 60க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கின்றனர். இதே கிராமத்தை சேர்ந்த பெருமாள் (95) என்பவர் வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் மாலை மரணம் அடைந்தார். இப்பகுதியில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு, நீண்ட காலமாக ஊருக்கு வெளியே ஒரு இடத்தை பயன்படுத்தி வந்தனர். இதற்கிடையே, கடந்த சில ஆண்டுகளாக அந்நிலத்தை ஒரு தனிநபர் வாங்கி, அதில் உடல்களை அடக்கம் செய்வதற்கு நீதிமன்ற தடை வாங்கியுள்ளார்.

இதனால், அந்த இடத்தில் பெருமாளின் சடலத்தை அடக்கம் செய்யக் கூடாது என்று போலீசார் தெரிவித்தனர். இதனால் நேற்று முன்தினம் இரவு பெருமாள்குடும்பத்தினர், கிராம மக்கள் மற்றும் போலீசாருக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வருவாய் துறை அதிகாரிகள் விரைந்து வந்து, கிராம மக்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். இந்நிலையில், தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 10 சென்ட் நிலம் கிராமத்திற்கு வழங்கப்பட்டது. அங்கு போலீசார் முன்னிலையில் பெருமாள் உடல் அடக்கம் செய்யப்பட்டது. மேலும், நீதிமன்றத்தை அணுகி சுடுகாடு நிலத்தை மீட்போம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

# நிப்ட்டி கல்லூரியில் கார்பைக் ஷோ சாகச நிகழ்ச்சி



திருப்பூர், மார்ச்.18

திருப்பூர் முதலிபாளையத்தில் உள்ள நிப்ட்டி பேஷன் கல்லூரியில்கார்பைக்ஷோ நேற்று நடந்தது. 30 கார்கள், 20 இருசக்கர வாகனங்கள்மூலம்வாகன சாகச நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோவையை சேர்ந்த பிரபலகிளப்களில்பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் இந்த ஸ்டண்ட் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்த வகை சாகச வாகனங்களில் பல வித மாற்றங்கள் செய்து வித்தியாசமான சப்தம் மற்றும் அதிக ஆர்பிளம் மற்றும்சிறந்தகட்டுப்பாடு என மாணவர்களை மெய்சிலிர்க்கும் வகையில் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாருதி 800 முதல் மினிகூப்பர், பிஎம்டபுள்யு கார்களும் அதிக ஆர்பிஎம் திறன் கொண்ட இருசக்கர வாகனங்களை கொண்டு பெண்கள், ஆண்கள் என வாகனங்களை இயக்கி பார்வையாளர்களை ஆச்சரியத்தில்ஆழ்த்தினர்.

# லட்சுமி நகரில் கொட்டப்படும் குப்பைகளால் சுகாதார சீர்கேடு



திருப்பூர், மார்ச்.18

திருப்பூர் லட்சுமிநகர் பகுதிகளில் நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புகள் பல உள்ளன. இதன் காரணமாக இந்த பகுதியில் அதிகளவு குப்பைகள் சேகரமாகி வருகிறது. இதற்கிடையே குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்படாமல் இருப்பதால், அந்த பகுதியில் குவிந்து கிடக்கிறது. இதனால், காற்றில் குப்பைகள் பகுதி முழுவதுமாக செல்கிறதுஇதுபோல் ஒருவித துர்நாற்றமும் வீசி வருகிறது.

அந்த பகுதியை கடந்து செல்கின்ற பொதுமக்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். எனவே, குப்பைகளை உடனுக்குடன் அகற்ற மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நீண்ட நோள் கோரிக்கை நிறைவேற்றம்; நத்தத்தில் அமைகிறது அரசு கலை கல்லூரி: பட்ஜெட்டில் அறிவிப்பால் பொதுமக்கள் மகிழ்ச்சி

நத்தம், மார்ச்.18

நத்தம் பகுதி மக்களின் நீண்டநாள்கோரிக்கையை ஏற்று அரசு கலை கல்லூரி அமைக்கப்படும் என தமிழக பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியானது. இதனால் இப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நத்தம் பகுதியில் அரசு கலை கல்லூரி அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதுதவிர சட்டமன்ற தேர்தலின் போது இப்பகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட பொழுது திமுக வெற்றி பெறும்பட்சத்தில் அரசு கலை கல்லூரி கொண்டு வரப்படும் என வாக்குறுதி வழங்கினார். மேலும் கல்லூரி அமைவதற்காக நத்தம் பேரூராட்சி தலைவர் சேக் சிக்கந்தர் பாட்சா தனது சொந்த இடத்தினை வழங்கியுள்ளது குறித்தும், விரைவில் கல்லூரி அமைய நடவடிக்கை எடுப்பதாகவும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் மக்கள் மத்தியில் வாக்குறுதியை மீண்டும் மீண்டும் கூறி வந்து அதற்கான முழுமுயற்சியும் மேற்கொண்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் தமிழக சட்டப்பேரவையில் 2025 2026ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நத்தம் பகுதி அரசு கலை கல்லூரி அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது இப்பகுதி மக்கள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து வழக்கறிஞர் சர்புதீன் கூறுகையில், 'நத்தம் பகுதியின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறிய தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார். இப்பகுதியை சேர்ந்த மாணவ, மாணவிகள் இன்னும் அதிகளவில் கல்லூரியில் படிப்பதற்கான வாய்ப்பு கூடியுள்ளது' என்றார்.

விவசாயி கண்ணன்: நத்தம் பகுதியானது தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாகும். இதனால் இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயம் சார்ந்துள்ளதால் பொருளாதார தற்சார்பு குறைவாகவே உள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நத்தம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று அரசு கலை கல்லூரி இப்பகுதியில் அமைய உள்ளது என அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதன்மூலம் மக்களுக்கான முதல்வர் என்பதை தொடர்ந்து நிரூபித்து வருகிறார். மேலும் இது கிராமப்புற மாணவர்கள் உயர் கல்விதடையின்றி தொடர வழிவகுக்கும். டெய்லர் ஆறுமுகம்: என் போன்ற பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு இந்த அறிவிப்பு செய்தியானது எங்களது குழந்தைகள் கல்லூரி கல்வியை இலகுவாக பெற வழிசெய்கிறது. முதல்வருக்கும், அரசுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம். ஆசிரியர் குருபிரசாத்: நத்தம் பகுதி கிராமப்புறம் அதிகம் உள்ளபகுதியாகும். இங்கு அரசு கலை கல்லூரி அமைப்பதன் மூலம் கிராமப்புற மாணவர்கள் எளிதில் கல்வி பயில வகை செய்யும்.

# கொளுத்தும் கோடை வெயில் புதிய வடிவிலான மண்பாண்ட பொருட்களுக்கு மவுசு



திருப்பூர், மார்ச்.18

தமிழகத்தில் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை கோடைக்காலம் இருந்து வந்தது. ஆனால், பருவநிலை மாற்றத்தின் காரணமாக கடந்த பிப்ரவரி மாதம் முதலே தமிழகத்தின் வெயில் வாட்டி வதைக்க துவங்கியுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் கடந்தசிலதினங்களாகவே வழக்கத்தை காட்டிலும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியுள்ளது. கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் தங்களை தற்காத்து கொள்ள தற்போது பல்வேறு பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற தொடங்கியுள்ளனர். இந்நிலையில், பொதுமக்களின் பார்வை இயற்கையாக குளிர்ச்சி ஏற்படுத்தக்கூடியதும், உடலுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடியதுமான மண்பாண்ட பொருட்களின் மீது கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். இதற்காக, வழக்கமான மண்பாண்ட பொருட்கள் மட்டுமல்லாது பல புதிய பொருட்களும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வழக்கமான மண்பானையை காட்டிலும் பிளாஸ்டிக் கேன்களில் உள்ளது போல் குழாய் பொருத்திய மூடியுடன் கூடிய மண்பானைகள், பிளாஸ்டிக் வாட்டர் பாட்டிலுக்கு பதிலாக மண்பாண்டத்தால் செய்யப்பட்ட வாட்டர் பாட்டில், தண்ணிர் சப்ளை செய்யக் கூடிய குவளை, டம்ளர் என புதிய பொருட்கள் பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது. குழாய் பொருத்திய மண்பானை ரூ.500 முதல் அளவு மற்றும் வேலைபாடுகளுக்கேற்றவாறுவிலையிலும், வாட்டர்பாட்டில், குவளைஆகியவைரூ.200 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மண்பாண்ட வியாபாரி லட்சுமி கூறுகையில், ''மண்பாண்ட பொருட்களிலும் பொதுமக்கள் நவீன வசதிகளுடன் எதிர்பார்க்கின்றனர். அதன் காரணமாக சாதாரண பானையை விட குழாய் பொருத்திய பானைகள், வாட்டர் பாட்டில் ஆகியவை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கோடை வெயில் தற்போது துவங்கியுள்ள நிலையில் இனி வரும் நாட்களில் பொதுமக்கள் அதிகம் வாங்கி செல்வார்கள் என எதிர்பார்க்கின்றனர். மேலும், மணப்பாறை பகுதிகளில் களிமண்ணால் செய்யப்பட்ட இந்த பொருட்களை திருப்பூரில் விற்பனை செய்து வருகிறோம். சரியான மணல் கிடைக்காதது, கைவினைஞர்கள் இல்லாதது ஆகியவற்றால் உள்ளூரிலேயே பானை உற்பத்தி செய்வது என்பது குறைந்து வெளியூர்களில் இருந்து வாங்கி வந்து விற்பனை செய்கின்றோம். பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை காட்டிலும் மண்பாண்ட பொருட்கள் உடலுக்கு நன்மை தரக்கூடியது. அதிக நேரம் தண்ணீரை குளிர்ச்சியாக வைத்திருக்க கூடியது'' என்றார்.

# வத்தலக்குண்டுவில் சீமை கருவேலம் பிடியில் மஞ்சளாறு: அகற்ற கோரிக்கை



வத்தலக்குண்டு, மார்ச்.18

வத்தலக்குண்டு மஞ்சளாற்றில் புதர்மண்டி காணப்படும் சீமை கருவேல மரங்கள், செடி கொடிகளைஅகற்ற வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தேனி மாவட்டம், தேவதானப்பட்டி மஞ்சளாறு அணையிலிருந்து வத்தலக்குண்டு மஞ்சளாற்றுக்கு தண்ணீர் வருகிறது. புதுப்பட்டியில் இருந்து பெரியகுளம் சாலை, பிலிஸ்புரம், பெருமாள் கோயில், சங்கிலி கோயில், நடுத்தெரு, தெற்கு தெரு உள்ளிட்ட பகுதிகளையொட்டி ஊர் நடுவே செல்கிறது இந்த மஞ்சளாறு. தற்போது இந்த மஞ்சளாற்றின் அனைத்து இடங்களிலும் சீமை கருவேல மரங்கள், செடிகொடிகள்புதர்மண்டி காணப்படுகிறது.

இதில் சீமை கருவேல மரங்கள் கோடை காலங்களில் ஆற்றில் செல்லும் குறைந்த அளவு தண்ணீரையும்உறிஞ்சிவிடுகிறது. மேலும் செடி கொடிகள் புதர்மண்டி இருப்பதால் பாம்பு, தேள், நட்டுவாக்காலி போன்ற விஷ ஜந்துகள் ஆற்றையொட்டியுள்ள வீடுகளில் புகுந்து விடுகிறது. இதனால் இப்பகுதி மக்கள் தினசரி அச்சத்துடன் இருக்க வேண்டியுள்ளது. எனவே பொதுப்பணி துறையினர் ஆற்றிலுள்ள முட்புதர்களை அகற்ற உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், ஆற்றோர குடியிருப்பு வாசிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலர் சின்னா கூறியதாவது: வத்தலக்குண்டு மஞ்சளாற்றையொட்டி குடியிருந்து வரும் குடிசைவாசிகள் ஆற்றில் புதர்மண்டி இருப்பதால் விஷஜந்துகள் வீட்டுக்குள் வந்து விடுமோ என்ற அச்சத்தில் தினசரி நிம்மதியாக தூங்க முடியாமல் தவித்து வருகின்றனர். மேலும் ஆற்றில் ஆக்கிரமித்துள்ள சீமைகருவேல மரங்களால் நீராதாரம் பாதிக்கப்படுகிறது.எனவேபொதுப்பணி துறையினர் மஞ்சளாற்றில் ஆக்கிரமித்து வளர்ந்துள்ள சீமை கருவேல மரங்கள், செடி கொடிகளை அகற்ற உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.

# ஜாமீனில் வந்த பைனான்ஸ் ஊழியர் வெட்டிக்கொலை: ஆரணியில் பரபரப்பு



ஆரணி, மார்ச்.18

ஜாமீனில் வந்த பைனான்ஸ் ஊழியர் சரமாரி வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக 3 பேர் போலீசில் இன்று சரணடைந்தனர். திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி டவுன் ஆரணி பாளையம் சாந்தா தெருவை சேர்ந்தவர் கரிமா என்கிற விக்னேஷ் (26). ஆரணியில் உள்ள தனியார் பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவருக்கு மனைவி மற்றும் ஒரு குழந்தை உள்ளனர். அவரது மனைவி தற்போது கர்ப்பமாக உள்ளார்.

விக்னேசும், ஆரணி பாளையம் தர்மராஜா கோயில் தெருவை சேர்ந்த மணிகண்டனும் நண்பர்கள். மணிகண்டன் மீது கொலை முயற்சி உள்பட பலவழக்குகள்நிலுவையில் உள்ளது. ஒரு வழக்கில் போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் ஜாமீனில் வெளிவந்த மணிகண்டன், போலீசில் தன்னைக் காட்டிக் விக்னேஷ்தான் என நினைத்து தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது விக்னேஷுடன் தகராறு செய்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 411 2021 அன்று மணிகண்டன் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இக்கொலை தொடர்பாக விக்னேஷ் மற்றும் அவரது நண்பர்கள் உள்ளிட்ட 4 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஜாமீனில் வந்த விக்னேஷுக்கும், மணிகண்டனின் ஆதரவாளர்களுக்கும் இடையே மீண்டும் அடிக்கடி கோஷ்டி மோதல் ஏற்பட்டது. மணிகண்டன் கொலை வழக்கு விசாரணை வரும் 27ம்தேதி கோர்ட்டில் நடக்க உள்ளது.

இந்நிலையில், மணிகண்டனின் ஆதரவாளர்களால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என நினைத்த விக்னேஷ், மணிகண்டன் ஆதரவாளர்களுடன்சமரசம் பேச திட்டமிட்டார். நேற்றிரவு சுமார் 10 மணியளவில் ஆரணி டவுன் புதுகாமூர் பகுதியில் மணிகண்டனின் ஆதரவாளர்கள் சுமார் 5 பேர் மது குடித்துக் கொண்டிருந்தனர். இதையறிந்த விக்னேஷ் தனது பைக்கில் அங்கு சென்று அவர்களிடம் சமரசம் பேசியுள்ளார். அப்போது அவர்களிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. விக்னேஷ் அவர்களிடம்இருந்துதப்பமுயன்றார். ஆனால் அவர்கள் சுற்றிவளைத்து தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் விக்னேஷை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பினர்.இதில்படுகாயமடைந்த விக்னேஷ் அதே இடத்தில் இறந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடம் வந்து சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலையாளிகளை தேடி வந்தனர். இதனிடையே இன்று காலை விக்னேஷ் கொலை தொடர்பாக மணிகண்டனின் ஆதரவாளர்கள் எனக்கூறப்படும் தனபால் (25), தாமோதரன் (24), கமல் (34) ஆகிய 3 பேர் கண்ணமங்கலம் போலீசில் சரணடைந்தனர். இவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். இக்கொலை தொடர்பாக அதேபகுதியை சேர்ந்த கணேஷ், சந்தோஷ், தினேஷ் ஆகிய 3 பேரை போலீசார் தனிப்படை அமைத்து தேடிவருகின்றனர். இக்கொலை சம்பவம் ஆரணியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காளப்பநாயக்கன்பட்டியில் மயானத்தில் தேங்கி நிற்கும் கழிவுநீரால் மக்கள் அவதி



சேந்தமங்கலம், மார்ச்.18

காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி மயானத்தில் பல மாதங்களாக தேங்கி நிற்கும் கழிவுநீரால் சடலங்களை தகனம் செய்ய முடியாமல் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். காளப்பநாயக்கன் பட்டி பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளது. பேரூராட்சியில் குடியிருப்பு பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் முழுவதும் பெரிய வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு கொல்லிமலை சாலையின் வழியாக சென்று அப்பகுதியில் உள்ள மின் மயானத்தின் பின்புறத்தில் கழிவுநீர் வாய்க்காலுக்கு சென்றடைகிறது. விவசாய நிலம் அருகே கழிவுநீர் செல்வதால், அப்பகுதியை சேர்ந்த சிலர் திடீரென டிப்பர் லாரி மண்ணை கொண்டு வந்து மயானம் அருகே உள்ள கழிவுநீர் வாய்க்காலில் கொட்டி சென்றுவிட்டனர். இதனால் கழிவுநீர் வெளியேறாமல் புதிதாக கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரவுள்ள மின் மயானம் சுற்றுச்சுவர் அருகிலேயே தேங்கியுள்ளது.

இதனால் மயான சாலை முழுவதும் கழிவுநீர் தேங்கியுள்ளதால் அப்பகுதியில் இறந்தவர்களின் சடலத்தை தகனம் செய்ய முடியாமல் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து பொதுமக்கள் கூறியதாவது: காளப்பநாயக்கன்பட்டி பைபாஸ் சாலை அமைப்பதற்கு முன்பு கழிவுநீர் அப்பகுதியில் உள்ள ஓடைக்கு சென்று விடும். தற்போது பைபாஸ்சாலையோரத்தில் கழிவுநீர் சென்று வந்தது. விவசாயம் பாதிக்கப்படுவதாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மயானம் செல்லும் வழியில் மண்ணை கொட்டி சென்று விட்டனர். இதனால் கழிவுநீர் வெளியேற வழி இல்லாததால் பல மாதங்களாக கழிவுநீர்மின்மயானம்அருகே தேங்கி உள்ளது. இதனால் சுகாதாரசீர்கேடு ஏற்பட்டு, அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது. வீடுகளில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இறந்தவர்களின் சடலத்தை எடுத்துச் சென்று தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சடலங்களை எடுத்துக் கொண்டு சேந்தமங்கலம், நாமக்கல் பகுதிகளுக்கு செல்ல வேண்டிய நிலை இருந்து வருகிறது. புதிதாக கட்டப்பட்டுள்ள மின் மயான சுற்றுசுவர் கழிவுநீர் தேங்கி நிற்பதால் சுவர்கள் பழுது ஏற்படும் நிலையில் உள்ளது. தேங்கி நிற்கும் கழிவுநீரால் பழைய சுற்றுச்சுவர் இடிந்து விட்டது. எனவே மாவட்ட நிர்வாகமும், பேரூராட்சி நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுத்து கழிவுநீர் வெளியேற வாய்க்கால் அமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளனர்.

# தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதை நிறுத்த வேண்டும்: இலங்கை அமைச்சர் சர்ச்சை பேட்டி

ராமேஸ்வரம், மார்ச்.18

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடிப்பதை நிறுத்தினால், இருநாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தைக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அந்நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் கூறினார்.

இந்திய – இலங்கை மக்கள் இணைந்து கொண்டாடிய கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா நேற்று நிறைவடைந்தது. இதில் பங்கேற்ற இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் நிருபர்களிடம் கூறியதாவது:

கச்சத்தீவு திருவிழா இரு நாடுகளுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துகிறது. தமிழக மீனவர்களின் இழுவை படகுகளால் இலங்கை மீனவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இலங்கை கடற்பரப்பில் நுழைந்து தமிழக மீனவர்கள் இழுவைமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதை நிறுத்தினால், நீண்ட காலமாக தொடரும் இந்த பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணவும், இருநாட்டு மீனவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு இருநாட்டு அரசுகளும் முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கை அமைச்சரிடம் ராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்க பிரதிநிதி ஜேசுராஜ், 'இலங்கையில் அமைந்துள்ள புதிய அரசு நல்லெண்ண அடிப்படையில் அந்நாட்டு சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளில் நல்ல நிலையில் உள்ள படகுகளையும் விடுவிக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார்.

# தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் நிர்வாக உறுப்பினராக அபூர்வா நியமனம்: அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச்.18

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாய நிர்வாக உறுப்பினராக செல்வி அபூர்வா நியமனம் செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு சட்டத்தின் கீழ் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டுள்ளது.



அதன்படி, இந்த தீர்ப்பாயத்தின் நிர்வாக உறுப்பினராக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி செல்வி அபூர்வா நியமிக்கப்படுகிறார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் முடிவுகள், வழிக்காட்டுதல்கள் அல்லது உத்தரவுகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்காக தமிழ்நாடு ரியல் எஸ்டேட் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள 7700 பணியிடங்களை நிரப்ப அரசாணை வெளியீடு

சென்னை, மார்ச்.18

அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. அதில், "சமூக நலன் மற்றும் மகளிர் அதிகாரமளித்தல் துறை ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் அங்கன்வாடி பணியாளர், மினி அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் நியமனத்திற்கான திருத்தப்பட்ட/ஒருங்கிணைந்த தகுதி அளவுகோல்கள் 7,783 அங்கன்வாடி பணி



யாளர்/மினி அங்கன்வாடி பணியாளர்/அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப அனுமதி அளிக்கப்படுகிறது" அரசாணையின்படி, அங்கன்வாடியில் உள்ள காலிப்பணியிடங்கள் நேரடியாக நியமனம் நிரப்பப்பட உள்ளன.

அதாவது எழுத்துத் தேர்வு ஏதுமின்றி, விண்ணப்பதாரர்களிடம் மாவட்ட வாரியாக நேர்முகத்தேர்வு நடத்தி, நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதில் 3886 அங்கன்வாடி பணியாளர், 305 மினி அங்கன்வாடி பணியாளர், 3592 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்கள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கன்வாடி பணியாளர்களை தேர்வு செய்வதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

# பாசன நீர் திறப்பிற்கு ஏதுவாக சிறப்பு தூர்வாரும் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும்: பொறியாளர்களுக்கு அமைச்சர் துரைமுருகன் அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.18

சென்னை தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நீர்வளத்துறையின் பொறியாளர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில், அரசால் அறிவிக்கப்பட்ட திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து மண்டல வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நீர்வளத்துறையின் முன்னோடியான திட்டங்கள் குறித்த முன்னேற்றம், நடைபெற்று வரும் முக்கிய திட்டப் பணிகள் குறித்த முன்னேற்றம், அணை



புனரமைப்பு திட்டத்தின் முன்னேற்ற விவரங்கள் மற்றும் வெள்ளத் தணிப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் பேசியதாவது: அனைத்து அறிவிப்பு பணிகளையும் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். மேலும் சிறப்பு தூர்வாரும் பணிகளை பாசன நீர் திறப்பிற்கு ஏதுவாக விரைந்து முடிக்கப்பட வேண்டும். இந்த நிதியாண்டின் பணிகள் அனைத்தையும் முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என அதிகாரிகளுக்கு அமைச்சர் துரைமுருகன் அறிவுறுத்தினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வளத்துறையின் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நீர்வளத்துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) மன்மதன், சிறப்பு செயலாளர் தரன், அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# சத்துணவு மைய சமையல் உதவியாளர் நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இடஒதுக்கீடு: அரசாணை வெளியீடு

சென்னை, மார்ச்.18

சத்துணவு மையங்களில் உள்ள 8,997 சமையல் உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அனுமதியளித்தும், மாற்றுத்திறனாளிகளுக்கு 4% இடஒதுக்கீடு செய்தும் தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் தெரிவித்திருப்பதாவது: எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் காலியாக உள்ள மொத்த சமையல் உதவியாளர் பணியிடங்களான 8,997 பணியிடங்களை மாதம் ரூ.3000 வீதம் குப்பூதியத்தில் (ஓராண்டு தொகுப்பூதியத்திற்கு பின் சிறப்பு கால முறை




ஊதியம்) நிரப்பிட அனுமதி அளிக்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை நிபுணர் குழு பரிந்துரை அடிப்படையில் தகுதியான மாற்றுத் திறனாளிகள் இந்த பணிகளுக்காக தேர்வு செய்யப்படுவர். அந்தவகையில் சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்கள் நியமனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இடஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் சங்கம் நன்றி: சத்துணவு அமைப்பாளர், சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான 4% இட ஒதுக்கீட்டினை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கி நிரப்பிட அரசாணை பிறப்பித்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதா ஜீவனுக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன் என சங்க தலைவர் ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# நாய் கடியால் பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவமனையில் ஏஆர்வி தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும்: பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

சென்னை, மார்ச்.18

பொது மக்கள் ரேபீஸ் நோயால் பாதிக்கப்பட்டால் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஏஆர்வி தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும் பொதுசுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன், ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சார்ந்த ஒரு நபர் நாய் கடித்து 3 மாதம் ஆகியும் ரேபீஸ் தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை என்பதால் இறந்துவிட்டார் என விசாரணையில் தெரிய வந்தது.

எனவே மக்கள் அனைவரும் நாய் கடித்த உடன் ஏஆர்வி (AntiRabies vaccine) எனப்படும் தடுப்பூசியை செலுத்திக் கொள்வது அவசியமாகிறது.

ரேபீஸ் ஒரு கொடிய வைரஸ் நோய். இந்நோயால் பாதிக்கப்பட்ட நாய், மனிதனை கடிப்பதால் மனிதன் பாதிப்புக்கு உள்ளாகிறான்.

நாய்கள் கடிப்பதால் மட்டும் இல்லாமல், நாய் புரண்டினால் உடலில் உள்ள சிறுகாயங்களில் உமிழ்நீர் பட்டாலும் ரேபீஸ் பரவும். ரேபீஸ் நோய்க்கு ஏஆர்வி எனப்படும் தடுப்பூசி உள்ளது. நாய் கடித்தவுடன் 4 ஊசிகள் போட்டு கொள்வதன் மூலம் ரேபிஸ் நோயை 100 சதவீதம் வரவிடாமல் தடுத்துவிடலாம். மேலும், நாயின் ஆழமான கடிகளுக்கு ஏற்ப இம்யூனோகுளோபுளின் மருந்தும் அளிக்கப்படுகிறது.

இந்த ஏஆர்வி மற்றும் இம்யூனோகுளோபுளின் தடுப்பூசிகள் அனைத்து அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 24 மணிநேரமும் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் வெறிநாய்கடியின் அவசியத்தை அறிந்து உரிய நேரத்தில் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று ரேபீஸ் எனப்படும் வெறிநாய்க்கடியிலிருந்து தற்காத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என பொதுசுகாதாரத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எஸ்ஆர்எம் குளோபல் மருத்துவமனையில் இதய சிகிச்சை குறித்த 2 நாள் கருத்தரங்கம்: உலகளவில் புகழ் பெற்ற மருத்துவர்கள் பங்கேற்பு

சென்னை, மார்ச்.18

எஸ்ஆர்எம் குளோபல் மருத்துவமனை, ஸ்பேஸ் 2025 இரண்டுநாள் இதய மருத்துவ கருத்தரங்கினை நடத்தியது. எஸ்ஆர்எம் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் இந்தியா முழுவதும் இருந்து 100க்கும் மேற்பட்ட இதயவியல் நிபுணர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வில் இதய மின்னணுவியல் மற்றும் சீரற்ற இதய துடிப்பு குறித்து பல்வேறு தலைப்புகளில் சிகிச்சை முறைகள், நவீன முன்னேற்றங்கள், உலகளவில் தற்போது பின்பற்றப்படும் சிறந்த சிகிச்சை மேலாண்மை முறைகள் போன்றவற்றை குறித்த விளக்கவுரைகள், விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் நடந்தன. ஸ்பேஸ் 2025ல் ஐக்கிய அமெரிக்க நாடுகள், மின்னெசோட்டா, மயோ கிளினிக்கை சேர்ந்த உலக அளவில் புகழ்பெற்ற டாக்டர் சாமுவேல் ஜே.ஆசிர்வாதம், ஐதராபாத், ஏஐஜி மருத்துவமனை டாக்டர் சி. நரசிம்




மன் ஆகியோர் தலைமை உரையாற்றினர்.

இந்த நிகழ்வை எஸ்ஆர்எம் குளோபல் மருத்துவமனையின் இதயவியல் மருத்துவ துறையின் இயக்குனர் டாக்டர் டி.ஆர்.முரளிதரன் தலைமையிலான மருத்துவர் குழு வடிவமைத்து வழங்கியது.

இந்த அறிவியல் கருத்தரங்கு குறித்து எஸ்ஆர்எம் குழுமத்தின் தலைவர் டாக்டர் ப. சத்யநாராயணன் பேசுகையில், ''ஸ்பேஸ் 2025யின் இலக்கு இந்தியாவில் வழங்கப்பட்டு வரும் இதய சிகிச்சையின் தரநிலைகளை உயர்த்துவதில் பங்காற்றுவதே. சீரற்ற இதய செயல்பாடு, இதய மின்னணுவியல் கோளாறுகள், இதர இதயம் சார்ந்த நோய்களால் உலகளவில் 3.3 கோடி பேர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் இந்த எண்ணிக்கை 20 முதல் 40 லட்சம் பேர் வரை இருக்கலாம். இத்தனை பெரிய எண்ணிக்கையில் உள்ளவர்களுக்கு சிகிச்சையளிக்கும் பெரும் சவாலை இது போன்ற கருத்தரங்குகள் ஊக்கப்படுத்த உதவும்,'' என்றார்.

ஸ்பேஸ் 2025ன் தலைமை ஒருங்கிணைப்பாளரும், எஸ்ஆர்எம் குளோபல் மருத்துவமனையின் இதய சிகிச்சை மைய இயக்குனருமான டாக்டர் டி.ஆர்.முரளிதரன் பேசுகையில், ''இந்த இரண்டு நாள் கருத்தரங்கத்தில் பல்வேறு துறை வல்லுநர்கள் வழங்கிய விளக்கவுரைகளும், கருத்து பரிமாற்றங்களும், விவாதிக்கப்பட்ட அதிநவீன தொழில்நுட்பங்களும் நம் நாட்டின் இதய மருத்துவத்தின் தரத்தை மேம்படுத்தும் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

நம் நாட்டில் இதய செயல்பாட்டு கோளாறுகள் ஒப்பீட்டளவில் மேற்கு நாடுகளை விட தற்போது குறைவாக இருந்தாலும், அதிகரித்து வரும் வயோதிகர்களின் எண்ணிக்கை, உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற இடர்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பெருமளவிலான பாதிப்புகளை குறித்த அச்சத்தை ஏற்படுத்துகிறது. அதனைசமாளிக்கஸ்பேஸ் போன்ற மருத்துவ கருத்தரங்குகள் வழிகோலும்,'' என்றார்.

# திருச்செந்தூர் கோயிலில் வரிசையில் காத்திருந்த பக்தர் மூச்சுத்திணறி பலி

திருச்செந்தூர், மார்ச்.18

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்வதற்கு விடுமுறை நாளான நேற்று கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்தது. இந்நிலையில், காரைக்குடி, சொக்கலிங்கம் செட்டியார் தெருவை சேர்ந்த ஜவுளி வியாபாரி ஓம்குமார் (50) நேற்று முன்தினமே தனது குடும்பத்தார் 20 பேருடன் வந்து விடுதியில் தங்கியுள்ளார்.




நேற்று காலை கோயிலில் குடும்பத்தில் சிலர் முடிகாணிக்கை செலுத்தி விட்டு சுவாமி தரிசனம் செய்வதற்காக பொது தரிசனப் பாதை, மூத்த குடிமக்கள் வழி மற்றும் ரூபாய் 100 கட்டண வழிகளில் காத்திருந்துள்ளனர். அப்போது ரூ.100 கட்டண வரிசையில் நின்றிருந்த ஓம்குமாருக்கு கூட்ட மிகுதியால் மூச்சு திணறல் ஏற்பட்டு அங்கேயே மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

# தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் பயங்கர தீ விபத்து: 2 தீயணைப்பு வீரர்கள் மயக்கம்; 630 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு

தூத்துக்குடி, மார்ச்.18

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்றபட்டதால் 630 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தீயணைக்கும் பணியில் ஈடுபட்ட 2 வீரர்கள் மயக்கமடைந்தனர். தூத்துக்குடியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் 1979ல் அனல்மின் நிலையம் முதல் யூனிட் அமைக்கப்பட்டது. தொடர்ந்து 1980, 1982, 1990, 1992ல் கூடுதலாக 4 யூனிட்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் தலா 210 மெகாவாட் வீதம் தினமும் 1050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் முதல் மற்றும் இரண்டாம் யூனிட் அனல்மின் நிலையத்தில் திடீரென புகை மூட்டம் ஏற்பட்டது.

மின் உற்பத்தியாகும் லைனில் தீப்பிடித்து எரிந்தது. அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஊழியர்கள் அலறியடித்து ஓடினர். சிறிது நேரத்தில் தீ மளமளவென எரியத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து 3வது அலகுக்கும் தீ பரவும் சூழல் ஏற்பட்டது. இதனால் உடனடியாக மற்ற அலகுகளில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. தீ விபத்து குறித்த தகவலை தொடர்ந்து தூத்துக்குடி சிப்காட், ஸ்பிக் தொழிற்சாலை, என்.டி.பி.எல்., தூத்துக்குடி புறநகர் பகுதிகள் மற்றும் ஏரல் உட்பட 12க்கும் மேற்பட்ட தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.



ஆனால் தீ வேகமாக பரவியதால் உடனடியாக அணைக்கமுடியவில்லை. சுமார் 15 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் தொடர்ந்து புகை மூட்டம் காரணமாக தீப் பற்றியது. இதன் காரணமாக 1 மற்றும் 2வது யூனிட்டுகளில் மின் உற்பத்தி முழுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. நேற்றும் பகல் முழுவதும் 2வது நாளாக தீயை அணைக்கும் பணியில் வீரர்கள் ஈடுபட்டனர். இந்த தீவிபத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான கேபிள் வயர்கள் உள்ளிட்ட பொருட்கள் எரிந்து நாசமானதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனல் மின் நிலையத்தில் உள்ள 3, 4, 5 ஆகிய 3 யூனிட்டுகளில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையே, மீட்புப் பணியின் போது அனல் மின் நிலைய பகுதியில் கரும்புகை மூட்டம் காரணமாக 2 தீயணைப்பு வீரர்கள் மயக்கம் அடைந்தனர். உடனடியாக அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் 630 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

★ கலெக்டர் நேரில் ஆய்வுஅனல் மின்நிலையத்தில் தீவிபத்து நடந்த பகுதியில் கலெக்டர் இளம்பகவத் நேரில் சென்று ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறுகையில், 'தீ அணைக்கப்பட்ட பிறகும் புகைவந்து கொண்டிருப்பதால் 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் மூலம் 50க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சில இடங்களை உடைத்து புதிதாக வழிஏற்படுத்திக்கொடுத்து தீயினுடைய தாக்கம் எங்கு அதிகமாக இருக்கிறதோ அந்த இடங்களில் தீயை அணைக்க ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர். எந்த ஒருஉயிர்பலியும்இல்லை. யூனிட் 1 மற்றும் 2 முழுமையாக மூடப்பட்டுள்ளது. யூனிட் 3 மற்றும் 4 பாதுகாப்பாக உள்ளது. அங்கு மின் உற்பத்தி நடக்கிறது. யூனிட் 1 மற்றும் 2ல் பற்றிய தீயை அணைக்கும் பணி இறுதி கட்டத்தில் உள்ளது' என்றார்.

# பஞ்சமி நில மீட்பு போராளிகள் நினைவு தினம்: சீமான் நிகழ்ச்சிக்கு வந்தவர்களால் நெடுஞ்சாலையில் கடும் நெரிசல்




மாமல்லபுரம், மார்ச்.18

மாமல்லபுரம் இசிஆர் நுழைவு பகுதிக்கு அருகே கட்சி கொடியை ஏற்றி வைக்கவும், காரணையில் பஞ்சமி நில மீட்பு போராளிகளின்நினைவுதூணுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதற்காகவும், இசிஆர் வழியாக மாமல்லபுரம் நுழைவு பகுதிக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வந்தார். தொடர்ந்து, கட்சி கொடியை ஏற்றி வைத்து, அனைவரும் ஒன்றிணைவோம் என உறுதி எடுத்துக் கொண்டனர். இதை தொடர்ந்து, மாமல்லபுரம் அடுத்த காரணை பகுதியில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து, பஞ்சமி நில மீட்பு போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஜான் தாமஸ் – ஏழுமலை ஆகியோரின் நினைவு தூணுக்கு மலர் வளையம் வைத்து சீமான் மரியாதை செலுத்தினார்.

அப்போது, சீமானுடன் வந்த முக்கிய கட்சி பிரமுகர்கள் மற்றும் தொண்டர்கள் தாங்கள் கொண்டு வந்த 25க்கும் மேற்பட்ட கார்களை மாமல்லபுரம்திருக்கழுக்குன்றம் நெடுஞ்சாலையை மறித்து மற்ற எந்த வாகனங்களும் செல்லாத வகையில், நடுரோட்டில் நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தினர். இதனால், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும், மாமல்லபுரத்தில் இருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் வாகனங்களும், திருக்கழுக்குன்றத்தில் இருந்து மாமல்லபுரம் செல்லும் வாகனங்களும் 20 நிமிடங்களுக்கு மேலாக வரிசை கட்டி நின்றதை காணமுடிந்தது.

அரசு பேருந்தில் அமர்ந்திருந்த பெண்கள் பேருந்து செல்ல வழி விடுங்கள் என கெஞ்சியும், யாரும் கார்களை எடுக்க முன்வரவில்லை. இதையடுத்து, பேருந்தில் பயணம் செய்த பெண்கள் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் கட்சியினரை திட்டி தீர்த்தனர். இதனால், அங்கு பரபரப்பு நிலவியது.

தினகனி


Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

18.3.2025

# புளியங்குடி அந்தோணிசாமிக்கு வேளாண் வேந்தர் விருது: சட்டப் பல்கலைக்கழகம் வழங்கியது

சென்னை, மார்ச்.18

முன்னோடி இயற்கை விவசாயி புளியங்குடி அந்தோணிசாமிக்கு வேளாண் வேந்தர் விருதை தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் வழங்கி கௌரவித்துள்ளது. இது குறித்து சட்டப் பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சாணம் மற்றும் கோமியம் போன்ற கால்நடை கழிவுப் பொருள்களையே இடுபொருள்களாக வைத்து நம் தாய் மண்ணின் வளத்தையும் செழுமையையும் மீட்டெடுக்கும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர் புளியங்குடி அந்தோணிசாமி.



இவர் விவசாயத்தில் பல்வேறு இயற்கையான முறைகளை புகுத்தி அதில் 20 சதவீதத்துக்கும் மேலாக மகசூலை பெருக்கிக் காட்டியவர். மருதாம்பு கரும்பு செய்வது மட்டுமின்றி அதிலிருந்து வரும் இலைதழைகளை மண்ணுரமாக மாற்றி இயற்கை விவசாயத்தில் பஞ்சபூதங்களை உள்ளடக்கி வையகமே வியந்து பார்க்கும் வகையில் விளைச்சல் கொடுத்தவர்.

நெல்லை மாவட்டத்தில் உள்ளடங்கிய புளியங்குடி என்ற ஒரு சிறிய கிராமத்தை "ஆசியாவின் எலுமிச்சை நகரம்' என்று உருவகப்படுத்தியதில் பெரும் பங்களிப்பை வழங்கியவர். இவரது சேவையைப் பாராட்டி இந்தியா மட்டுமின்றி பல்வேறு நாடுகளும் இவருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்துள்ளன. இத்தகைய சிறப்பு மிக்க முன்னோடி இயற்கை விவசாயி புளியங்குடி அந்தோணிசாமிக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்" வேளாண் வேந்தர்' என்ற விருதை வழங்கியுள்ளது. இந்த விருதை சென்னை பெருங்குடியில் உள்ள பல்கலை. வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் உயர்நீதிமன்ற நீதிபதி நக்கீரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சந்தோஷ் குமார், பதிவாளர் கௌரி ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கஞ்சா கும்பலை பிடித்தபோது தப்பி ஓடியவரை விரட்டிய ஏட்டு மயங்கி விழுந்து சாவு

விக்கிரவாண்டி, மார்ச்.18

கஞ்சா கும்பலை பிடித்தபோது தப்பி ஓடியவரை விரட்டிய ஏட்டு மயங்கி விழுந்து உயிரிழந்தார். விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தவர் சீனிவாசன்(40). நேற்று அதிகாலை 6 மணி அளவில் விக்கிரவாண்டி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஏட்டு சீனிவாசன் மற்றும் முதல்நிலை காவலர் மஞ்சுநாதன் ஆகியோர் ரோந்து சென்றனர். அப்போது ஆவுடையார்பட்டு கிராமத்தில் 3 நபர்கள் சந்தேகப்படும் வகையில் நின்றிருந்தனர். போலீசாரை பார்த்ததும் 3 பேரும் தப்பி ஓடினர். இதில் இருவரை பிடித்ததில் ஒருவர் கஞ்சா பாக்கெட் வைத்திருந்தது தெரியவந்தது.

இதை தொடர்ந்து தப்பி சென்றவரை பிடிக்க இருவரும் சென்றனர். தொரவி கிராம ஏரிக்கரை



யில் நின்றிருந்த அந்த நபரை ஏட்டு சீனிவாசன் மற்றும் காவலர் மஞ்சுநாதன் ஆகிய இருவரும் பிடிக்க ஓடியுள்ளனர். அப்போது ஏட்டு சீனிவாசன் திடீரென மயங்கி விழுந்தார். மஞ்சுநாதன் அவரை மீட்டு, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர். காவல்துறையில் மிக நேர்மையாக பணியாற்றியதற்காக சீனிவாசனுக்கு சில நாட்களுக்கு முன், விழுப்புரம் எஸ்பி சரவணன், பரிசு மற்றும் நற்சான்றிதழ் வழங்கி பாராட்டியது குறிப்பிடத்தக்கது. இறந்த சீனிவாசனுக்கு மகேஸ்வரி (35) என்ற மனைவியும் கிரிஷ்னிகா(8) என்ற மகளும், கிருத்தி (6) என்ற மகனும் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வந்த சீனிவாசன் (40) என்பவர் நேற்று விடியற்காலை சக காவலர் மஞ்சுநாதன் என்பவருடன் தொரவி கிராமத்தில், விக்கிரவாண்டி – புதுச்சேரி மாநில நெடுஞ்சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகப்படும்படியான நபரை விரட்டிப் பிடிப்பதற்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக மயங்கி கீழே விழுந்து உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். தலைமைக் காவலர் சீனிவாசன் அர்பணிப்புடன் கூடிய பணி எந்நாளும் நினைவு கூறத்தக்கது. அவரது உயிரிழப்பு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சீனிவாசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு கூறி உள்ளார்.

# செஞ்சி அருகே பைக் அரசு பஸ் மோதல் சென்னை தம்பதி, மகள் பலி:இறுதி சடங்கிற்கு வந்தபோது சோகம்

செஞ்சி, மார்ச்.18

பைக் மீது பேருந்து மோதியதில் சென்னையை சேர்ந்த தம்பதி, மகள் பலியாகினர். விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த ராஜாம்புலியூரை சேர்ந்தவர் துரைக்கண்ணு(46). சென்னை மதுரவாயல் பகுதியில் குடும்பத்துடன் தங்கி, கொத்தனார் வேலை செய்து வந்தார். இவரது மனைவி பச்சையம்மாள்(42). இவர்களது மகன் குணசேகர் (21) தந்தையுடன் கொத்தனார் வேலை செய்கிறார். மகள் கோபிகா(18), சென்னை கல்லூரியில் பிஎஸ்சி முதலாம் ஆண்டு கம்ப்யூட்டர் சயின்ஸ்



படித்து வந்தார். துரைக்கண்ணுவின் அண்ணன் நந்தகோபால் (55) விபத்தில் படுகாயம் அடைந்து வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு உயிரிழந்தார்.

தகவல் அறிந்ததும் சென்னையில் இருந்து துரைக்கண்ணு குடும்பத்துடன் பைக்கில் நள்ளிரவு இரண்டு மணிக்கு செஞ்சிக்கு புறப்பட்டார்.

ஒரு பைக்கில் அவரும், மனைவி பச்சையம்மாள், மகள் கோபிகாவும், மற்றொரு பைக்கில் மகன் குணசேகரும் சென்றனர். அதிகாலை 5 மணி அளவில் செஞ்சிதிண்டிவனம் சாலை வல்லலம் தொண்டியாற்று பாலம் அருகே சென்றபோது, எதிரே செஞ்சியில் இருந்து சென்னைகிளாம்பாக்கம் வந்த அரசு பேருந்து, துரைக்கண்ணுவின் பைக் மீது மோதியது. இதில் துரைக்கண்ணு, பச்சையம்மாள், கோபிகா ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். பின்னால் மற்றொரு பைக்கில் வந்ததால் குணசேகர் உயிர் தப்பினார். பெற்றோரும் தங்கையும் பலியானதை பார்த்து அவர் பித்து பிடித்தது போல கதறினார். விபத்து குறித்து செஞ்சி போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கிறார்கள்.

# என்சிஇடி நுழைவுத் தேர்வு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, மார்ச்.18

என்சிஇடி நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் மார்ச் 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக என்டிஏ அறிவித்துள்ளது. ஒருங்கிணைந்த 4 ஆண்டு ஆசிரியர் பட்டப் படிப்புகளில் சேர தேசிய அளவிலான பொது நுழைவுத் தேர்வில் (என்சிஇடி) தேர்ச்சி பெற வேண்டும்.

இந்த தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) நடத்தி வருகிறது. அதன்படி நடப்பாண்டுக்கான என்சிஇடி நுழைவுத் தேர்வு கணினி வாயிலாக ஏப்ரல் 29ம் தேதி நடத்தப்படவுள்ளது. இதற்காக நாடு முழுவதும் 178 நகரங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த தேர்வுக்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த பிப்ரவரி 20ம் தேதி தொடங்கி நேற்றுடன் முடிவடைந்தது. இந்நிலையில் பல்வேறு தரப்பின் கோரிக்கைகளை ஏற்று விண்ணப்பிக்கும் கால அவகாசம் மார்ச் 31ம் தேதி இரவு 9 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து விருப்பமுள்ளவர்கள் https://exams.nta.ac.in/NCET/ எனும் வலைத்தளம் வழியாக துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும். ஹால்டிக்கெட் வெளியீடு உட்பட கூடுதல் விவரங்களை www.nta.ac.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம். ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0114075 9000 என்ற தொலைபேசி எண் அல்லது ncet@nta.ac.in மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம் என்று என்டிஏ வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# நான் வெள்ளையாக இல்லை.. நம்ம ஊரு கலர் தான்! ஐஸ்வர்யா ராஜேஷ்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் ஐஸ்வர்யா ராஜேஷ். இவர் 'அட்டகத்தி' படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். அதைத்தொடர்ந்து, 'காக்கா முட்டை, தர்மதுரை, ரம்மி, கனா, சாமி 2, வடசென்னை' உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானார்.

தற்போது இவர் தெலுங்கு சினிமாவில் தனது கவனத்தை திருப்பி இருக்கிறார். அதன்படி ஐஸ்வர்யா ராஜேஷ், வெங்கடேசுக்கு ஜோடியாக நடித்த சங்கராந்திக்கு வஸ்துன்னம் படம் ரூ.400 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது.

இந்த நிலையில், நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் சேலத்தில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அப்போது பேசிய அவர், க.பெ.ரணசிங்கம் படம் உண்மை கதை என்பதால் அப்படத்திற்கு மிகப்பெரிய தாக்கம் கிடைத்துள்ளதாக கூறினார். மேலும் 'வடசென்னை, காக்கா முட்டை, தர்மதுரை' உள்ளிட்ட படத்தின் அனுபவங்கள் மற்றும் தனக்கு பிடித்த பாடல்கள், டயலாக் உள்ளிட்டவைகளை பகிர்ந்து கொண்டார். மேலும் நிகழ்ச்சியின் போது ரசிகர் ஒருவர், நீங்கள் இப்போது இருக்கும் கலர் ஒரிஜினலா இல்லை படத்தில் இருக்கும் கலர் ஒரிஜினலா? என்று கேள்வி கேட்டார். அதற்கு பதிலளித்த ஐஸ்வர்யா ராஜேஷ், நான் வெள்ளையாக இல்லை நம்ம ஊரு கலர் மாநிறம் தான், அதுதான் அழகு என்று கூறினார். மேலும் விரைவில் 'வடசென்னை 2' படம் தொடங்கும் என்றும், தற்போது தெலுங்கு படம் ஒன்றில் நடித்து வருவதாகவும் கூறினார்.

# ரீரிலீஸாகும் ஆர்யாவின் "பாஸ் என்கிற பாஸ்கரன்"

ராஜேஷ் எம். முதல் படமாக இயக்கிய 'சிவா மனசுல சக்தி' மாபெரும் வெற்றியை பெற்றது. அடுத்து இயக்கிய 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு இருந்தது. அதற்கேற்ப படமும் ரசிகர்களை திருப்தி செய்து மாபெரும் வெற்றியை பெற்றது நயன்தாரா, ஆர்யாவுடன் நடித்த 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படம் எப்போது பார்த்தாலும் போரடிக்காத காமெடி கிளாஸிக் . ராஜேஷ் எம் இயக்கத்தில் ஆர்யா, நயன்தாரா, சந்தானம் நடிப்பில், யுவன் சங்கர்ராஜா இசையில், கலக்கலான ரொமான்ஸ் காமெடி ஜானரில் வெளியான 'பாஸ் என்கிற பாஸ்கரன்' வெளியானபோதே ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்று, பிளாக்பஸ்டர் வெற்றி பெற்றது. யுவன் சங்கர் ராஜா இசையில் சூப்பர் ஹிட் பாடல்களுடன் வெளிவந்த இப்படத்தின் மொத்தப்பாடல்களும் இன்றளவும் ரசிப்பட்டு வருகிறது. மேலும் நடிகர் ஆர்யா திரைவாழ்க்கையில் மிக முக்கியமான வெற்றித்திரைப்படமாக அமைந்தது. படத்தின் வெற்றியில் நாயகியாக நடித்திருந்த நயன்தாராவுக்கு முக்கிய பங்குண்டு. தல தளபதி சலூன்கடை ஓனராக வந்த சந்தானத்தின் காமெடி வொர்க் அவுட்டானது. குறிப்பாக ஆர்யா சந்தானம் காம்போவில் உருவான இப்படத்தின் காமெடி ட்ராக்குக்கு என தனி ரசிகர் பட்டாளம் இன்றளவும் உள்ளது. படத்தின் மிகப்பெரும் தூணாக இந்த காமெடி ட்ராக் அமைந்தது. இந்நிலையில் ஆர்யா நடிப்பில் வெளியான 'பாஸ் என்கிற பாஸ்கரன்' திரைப்படம், வரும் 21ம் தேதி ரீரிலீஸாகிறது.



# வைரலாகும் நடிகை அமலாபாலின் புதிய பதிவு!

தமிழ் சினிமாவில் 'வீரசேகரன்' என்கிற திரைப்படத்தின் மூலம் அறிமுகமான நடிகை அமலா பாலை, சர்ச்சை நாயகியாக மாற்றியது 'சிந்து சமவெளி' திரைப்படம். இதைத்தொடர்ந்து இயக்குனர் பிரபு சாலமன் இயக்கத்தில் அமலாபால் நடித்த 'மைனா' திரைப்படம் இவருடைய திரை உலக வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. தமிழை தாண்டி இந்தி, தெலுங்கு, மலையாளம் என பல்வேறு மொழிகளில் நடித்துள்ளார். தனுஷ் உடன் வேலையில்லா பட்டதாரி 1 மற்றும் 2, விஷ்ணு விஷாலின் ராட்சசன் என தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக மாறிய அமலா பால் ரத்னகுமார் இயக்கத்தில் வெளியான ஆடை படத்தில் நிர்வாணமாக நடித்து சர்ச்சையை கிளப்பினார். அதன் பின்னர் தமிழில் அவருக்கு பெரிய அளவில் பட வாய்ப்புகள் அமையவில்லை. விஜய் சேதுபதியுடன் ஒப்பந்தமான படத்தில் இருந்தும் அவர் நீக்கப்பட்டார். கடந்த ஆண்டு மலையாளத்தில் பிரித்விராஜ் உடன் அவர் இணைந்து நடித்த 'ஆடு ஜிவிதம்' திரைப்படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றியை பெற்றது. 150 கோடி ரூபாய் வரை வசூல் ஈட்டியது அந்த படம். தொடர்ந்து தன்னுடைய திரையுலக வாழ்க்கையில் முன்னணி இடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த அமலா பால், 'தலைவா' மற்றும் 'தெய்வத்திருமகள்' படத்தில் நடிக்கும்போது இப்படத்தின் இயக்குனர் ஏ.எல்.விஜயை காதலித்து கடந்த 2013ம் ஆண்டு, இருதரப்பு குடும்பத்தினர் சம்மதத்துடன் திருமணம் செய்தார். பின்னர் கருத்து வேறுபாடு காரணமாக திருமணமான நான்கு வருடங்களில், இருவரும் ஒருமித்த மனதுடன் விவாகரத்து பெற்று பிரிந்து சென்றனர். அதன் பின்னர் தனது நீண்ட நாள் நண்பர் ஜெகத் தேசாய் என்பவரை அமலாபால் கடந்த ஆண்டு திருமணம் செய்துகொண்டார். தனது கணவருடன் ஜாலி டூர் அடித்து வரும் புகைப்படங்களையும் வீடியோக்களையும் வெளியிட்டு வந்த அமலாபாலுக்கு தற்போது, அவரது கணவர் சொகுசு கார் ஒன்றை பரிசாக வழங்கியுள்ளார். கார் பரிசை பார்த்ததும் அவரது கணவரை கட்டிப்பிடித்து அப்படியே முத்தமழை பொழிந்துவிட்டார் அமலா பால். இந்நிலையில், நடிகை அமலா பால் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கணவர் வாங்கிக் கொடுத்த காரில் இருந்து இறங்கி வந்து முதலில் கணவர் கையில் இருக்கும் குழந்தையை வாங்கிக் கொஞ்சுகிறார். அந்த வீடியோவை வெளியிட்டு அதற்கு கேப்ஷனாக முதலில் 'பேபி அடுத்து தான் பேப்' என குறிப்பிட்டுள்ளார். இந்த பதிவு தற்போது இணையத்தை வைரலாகி வருகின்றது.

# ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன்: தென்கொரிய வீராங்கனை அன்சே யங் சாம்பியன்

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டி பர்மிங்காம் நகரில் நடந்து வந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த இறுதி ஆட்டத்தில் நம்பர் ஒன் நட்சத்திரமும், ஒலிம்பிக் சாம்பியனுமான அன்சே யங் (தென் கொரியா), 2ம் நிலை வீராங்கனை வாங் ஷி யியுடன் (சீனா) மோதினார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் அன்சே யங் 13-21, 21-18, 21-18 என்ற செட் கணக்கில் வாங்கை வீழ்த்தி 2வது முறையாக பட்டத்தை கைப்பற்றினார்.

ஆண்கள் ஒற்றையரில் சீன வீரர் ஷி யு கி 21-17, 21-19 என்ற நேர் செட்டில் லீ சியாவ் ஹாவை (சீன தைபே) தோற்கடித்து கோப்பையை வசப்படுத்தினார்.

# இண்டியன்வெல்ஸ் டென்னிஸ்; சாம்பியன் பட்டம் வென்றார் ஜேக் டிராப்பர்




இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்து வருகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றிருந்த இந்த தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி இன்று நடைபெற்றது.

இதில் பிரிட்டனின் ஜேக் டிராப்பர் மற்றும் டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே ஆகியோர் மோதினர். இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட டிராப்பர் 62, 62 என்ற நேர் செட் கணக்கில் ஹோல்கர் ரூனேவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

# இது அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி ஹர்மன்ப்ரீத் கவுர்



3வது மகளிர் பிரீமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் முன்னாள் சாம்பியனான மும்பை இந்தியன்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியை சந்தித்தது. இதில் டாஸ் வென்ற டெல்லி அணியின் கேப்டன் மெக் லானிங் பீல்டிங்கை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் பேட் செய்த மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கு 149 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஹர்மன்ப்ரீத் கவுர் 66 ரன்களும், நாட் ஸ்கைவர்பிரண்ட் 30 ரன்களும் அடித்தனர். டெல்லி அணி தரப்பில் மரிஜானே காப், ஜெஸ் ஜோனஸ்சென், ஸ்ரீ சரணி தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

இதைத்தொடர்ந்து 150 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய டெல்லி அணி 9 விக்கெட்டுக்கு 141 ரன்களே எடுத்தது. இதனால் மும்பை அணி 8 ரன் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்று 2வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. டெல்லி தரப்பில் மரிசான்னே காப் 40 ரன்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 30 ரன்களும் அடித்தனர். மும்பை தரப்பில் நாட் ஸ்கைவர்பிரண்ட் 3 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகி விருதை ஹர்மன்ப்ரீத் கவுரும், தொடர் நாயகி விருதை ஸ்கைவர் பிரண்டும் கைப்பற்றினர். இந்நிலையில், இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின் மும்பை கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர் அளித்த பேட்டியில் கூறியதாவது, இது அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. கடைசி பந்து வரை போராடிய விதம் மகிழ்ச்சி அளிக்கிறது. பேட்டிங்கில் நாங்கள் நினைத்த மாதிரி தொடக்கம் கிடைக்கவில்லை. நான் இறங்கிய போது எதுவும் எளிதாக இருக்கவில்லை. நாட் ஸ்கைவர் (30 ரன்) களத்தில் இருக்கும் போது, நாம் அதிகமாக நெருக்கடிக்குள்ளாக வேண்டிய தேவையில்லை. அவர் நல்ல பார்மில் இருப்பதால் ஒன்று, இரண்டு ரன் வீதம் எடுத்து ஒத்துழைப்பு கொடுத்தால் போதும் என்று நினைத்து ஆடினேன். அது அந்த சமயம் பார்ட்னர்ஷிப்புக்கு உதவிகரமாக இருந்தது. டெல்லிக்கு எதிராக 149 ரன்கள் என்பது திருப்திகரமான ஸ்கோர் அல்ல. ஆனால் இது போன்ற அழுத்தமான ஆட்டத்தில் அது 180 ரன்கள் போல் தோன்றியது. எல்லா பெருமையும் பந்துவீச்சாளர்களையே சாரும். பவர் பிளேயில் விக்கெட்டுகளை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை பந்து வீச்சாளர்களிடம் இருந்தது. அந்த வாய்ப்பை ஷப்னிம் இஸ்மாயிலும், நாட் ஸ்கைவரும் உருவாக்கியதுடன், ஆட்டத்தையும் எங்கள் பக்கம் கொண்டு வந்தார்கள். அணியில் ஒவ்வொரு பவுலரும் பந்து வீசிய விதத்தை பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.